# ஒன்றாரியோ தேர்தல் 2025

## பிரீமியர் டக் ஃபோர்ட் திடீர் தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளார். வாக்களிக்கும் நாள் வியாழக்கிழமை ,பெப்ரவரி 27, 2025 ஆகும்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு நெருக்கடி ஒன்ராறியோவில் உள்ள அனைவருக்கும் ஒரு பாரிய பிரச்சினையாகும். உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக நிற்கும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டியகட்டாயம் நமக்கு உள்ளது.

**உங்கள் வேட்பாளர்களிடம் கேட்க வேண்டிய 6(ஆறு)கேள்விகள் இங்கே:**

---

## 1. அடிப்படைச் சம்பளத்தினை மணித்தியாலத்திற்கு ஆகக் குறைந்தது $20ஆக உயர்த்துவதைநீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

ஃபோர்டு அரசாங்கம் 2018 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, $15 க்கான அடிப்படைச் சம்பள உயர்வை இரத்துசெய்யாமல், இரண்டு ஆண்டுகளுக்கு அடிப்படைச் சம்பள உயர்வை முடக்காமல் இருந்திருந்தால், ஒன்றாரியோவில்அடிப்படைச்சம்பளம் இன்று $20 ஆக இருந்திருக்கும். இன்று அடிப்படைச்சம்பளம்  மணித்தியாலத்திற்கு $17.20 ஆக மட்டுமே உள்ளது.

நம்மில் பலர் குறைந்த பாதுகாப்புடனான கிக் வேலை(gig work), உண்மைக்கும் புறம்பாகநாங்கள்  சுதந்திரமான ஒப்பந்தக்காரர்கள்(independent contractors) என்று அழைக்கப்படுதல் அல்லது குடிவந்ததொழிலாளர்களாக பல்வேறு துறைகளில் ஒழுங்கற்ற முறையில் வேலைக்கு அமர்த்தப்படிருத்தல் போன்றசந்தர்ப்பங்களில் இந்த $17.20 க்குக் குறைவாகவே பெறுகின்றனர். குடி வந்த பல இன, பல மொழிகள் பேசும்சமூகங்கள்(racialized community), பெண்கள் மற்றும் ஊனமுற்ற தொழிலாளர்கள், பகுதி நேர, குறைந்த சம்பளம்மற்றும் நிரந்தரமற்ற வேலைகளில் மிகவும் கூடுதலாக அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

நாம் அனைவரும்  மணிக்கு $20 ஐ சம்பாதித்தாலும், அந்தத் தொகை இன்றைய விலைவாசி உச்ச நிலையில் வாழப்போதுமானதாக இல்லை. வாழ்க்கையை உண்மையிலேயே ஓரளவு கொண்டு செல்ல, நம் அனைவருக்கும் வலுவானவாடகைக் கட்டுப்பாடு தேவை(strong rent control); செலவுகளைத் தாங்கக்கூடிய பொது வீடுகள்(public housing); ஒரு நாளைக்கு $10 குழந்தை பராமரிப்பு; இலவச அல்லது குறைந்த விலை, நம்பகமான பொதுப் போக்குவரத்து; சுகாதாரம், கல்வி மற்றும் பல  வலுவான சமூகத் திட்டங்கள் தேவை.

தொழிலாளர்களுக்கான நீதி வேண்டி போராடும் இயக்கம்(Justice for Workers), நாம் அனைவரும் உடனடியாக ஒருமணி நேரத்திற்கு குறைந்தபட்சம் $20 ப்பெற தகுதியானவர்கள் என்று நம்புவதுடன், மேலும் அனைவரையும்வறுமையிலிருந்து வெளியே கொண்டு வர கூடுதல் அதிகரிப்புகள் தேவை என்பதனையும் வலியுறுத்துகின்றது.

# ஒன்றாரியோ தேர்தல் 2025

## 2. உண்மையான வாடகைக் கட்டுப்பாட்டை சட்டமாக்கி, பொது வீட்டுத்திட்டங்களில் முதலீடுசெய்வீர்களா?

கடந்த 40 ஆண்டுகளாக, தொடர்ந்து வந்த ஒன்றாரியோ அரசாங்கங்கள் பொது வீடுகளுக்கான(public housing) நிதியைக் குறைத்து, வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை(rent control laws)வலுவிழக்கச் செய்துள்ளன. மிகசமீபத்தில், பிரீமியர் ஃபோர்ட் 2018 க்குப் பிறகு கட்டப்பட்ட வீடுகளுக்கான வாடகைக் கட்டுப்பாட்டை நீக்கியுள்ளார். இதன் விளைவாக, எங்களில் எவருக்கும் போதுமான மலிவு வீடுகள் கிடைக்கவில்லை. பணம் இருந்தால் வீட்டுப்பற்றாக்குறை இல்லை என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

கார்ப்பரேட் நில உரிமையாளர்கள் மற்றும் டெவலப்பர்கள்(corporate landlords and developers)குத்தகைதாரர்கள்(tenents)மற்றும் சிறு வர்த்தககர்களிடமிருந்து வானளாவிய வாடகையிலிருந்துஇலாபம் பெறுகிறார்கள். Doug Ford இன் கன்சர்வேடிவ்கள், பொது நிலத்தை இலாப நோக்கம் கொண்டடெவலப்பர்களிடம்(for-profit developers)ஒப்படைப்பது, பாதுகாப்பு விதிமுறைகளை நீக்கி, வாடகைக்கட்டுப்பாடுகளை அகற்றுவது ஆகியவை மூலம் ஓர் "இலகு வியாபாரத்திற்கு"(free enterprise )வழிவகுத்து, எங்கள்வீட்டு நெருக்கடியைத் தீர்க்க்கலாம் என எங்களை நம்பச் சொல்கின்றனர்.

ஆனால் உண்மை என்னவென்றால், இலாபத்தினை நோக்காகக் கொண்ட டெவலப்பர்கள்தான் பிரச்சனையே தவிரதீர்வு அல்ல. கனடாவின் ரியல் ப்ராப்பர்ட்டி அசோசியேஷனின் தலைமை நிர்வாக அதிகாரி மைக்கேல்ப்ரூக்ஸ்(Michael Brooks,CEO of Real Property Association)(அதன் உறுப்பினர்கள் ரியல் எஸ்டேட்டில் 1 டிரில்லியன்(1 trillion )கனடிய டாலர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்) மிகத் தெளிவாகக் கூறியதாவது: "மிகவும்மலிவான அல்லது சமூக வீடுகளை உருவாக்க நாங்கள் பணிபுரியவில்லை. நாங்கள் அங்கு இருக்க முடியாது. நாங்கள் வியாபாரத்தில் இருக்கிறோம். இந்த இரண்டுக்கும் இடையே ஒரு கோடு போடுவோம்," என்பதாகும்.

சாதாரணமான வாங்கக்கூடிய விலையிலான வீடுகள் கட்டுவதற்குப் பதிலாக, பணம் இருப்பவர்களுக்கு மட்டுமே வீடுகட்டித் தருவதன் மூலம் அவர்களின் டெவலப்பர் நண்பர்கள் பெரும் இலாபம் ஈட்ட ஃபோர்ட் அரசு தொடர்ந்து அனுமதிஅளித்து வருகிறது. எங்கள் கோபத்தைத் திசைதிருப்ப, அவர்கள் புலம்பெயர்ந்தோர், அகதிகள் மற்றும் சர்வதேசமாணவர்களை நோக்கி விரலை நீட்டி, வீட்டு நெருக்கடிக்கு அவர்களைக் குற்றம் சாட்ட முயற்சிக்கின்றனர்.

இந்த பிரித்தாளும் உத்திக்குள் விழாமல் இருப்போம். அனைவருக்கும் உயர்தர, சமூக வீடுகளை வேண்டுவதுடன்வலுவான வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கோருவதற்கு ஒன்றுபடுவோம்.

# உங்கள் வேட்பாளர்களைக் கேளுங்கள்

## 3. ஒன்ராறியோ வேர்க்ஸ் (OW) மற்றும் ஒன்ராறியோ இயலாமை ஆதரவு திட்டம் (ODSP) ஆகியவற்றுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை உடனடியாக இரட்டிப்பாக்குவீர்களா?

2020 ஆம் ஆண்டில் கோவிட் தொற்றுநோய் காலத்தில், கனடாவின் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் பெனிஃபிட் (CERB) திட்டம் ஒரு நபருக்கு வாரத்திற்கு $500 அல்லது மாதத்திற்கு $2,000 வருமான ஆதரவை வழங்கியது. கடந்த ஆண்டு, ஒன்ராறியோவில் ஒரு தனி நபரின் வறுமைக் கோடு மாதத்திற்கு $2,302(poverty line)என கணக்கிடப்பட்டது.

2025 இல், OW இல் உள்ள ஒரு நபர் அதிகபட்சம் $733/மாதம் மற்றும் ODSP இல் உள்ள ஒரு நபர் அதிகபட்சமாக$1,308/மாதம் பெறுகிறார். இதன் விளைவாக, சமூக உதவியில் இருப்பவர்கள், ஸ்மார்ட்ஃபோன்கள் அல்லதுட்ரான்ஸிட் பாஸ்கள் போன்றவற்றை வாங்குவதற்கு, நியாயமான வேலையைத் தேடுவதற்கு அல்லது ஆரோக்கியமாகஇருப்பதற்கு நியாயமான உணவை வாங்குவதற்கு வருமானப் பாதுகாப்பு இல்லாமல் உள்ளனர். பெறக்கூடிய மலிவுவிலை வீடுகளைக் கண்டுபிடிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக உள்ளது.

1990 களின் நடுப்பகுதியில் கன்சர்வேடிவ் அரசாங்கம் வீதங்களை 21%த்தால் குறைத்ததால் விகிதங்கள்(rates)மிகவும் குறைவாக உள்ளன. 2018 மற்றும் 2023 க்கு இடையில், பிரீமியர் ஃபோர்டின் கீழ், பணவீக்கம் 18% அதிகரித்துள்ளது. ஆனால் ODSP நன்மைகள் 12% மட்டுமே அதிகரிக்கப்பட்டன; OWல் எந்த அதிகரிப்பையும்காணவில்லை!

ஒன்றாரியோவின் OW மற்றும் ODSP விகிதங்களை உடனடியாக இரட்டிப்பாக்குவது சமூக உதவியில்இருப்பவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். அதேவேளையில் நாம் அனைவரும் கண்ணியமாக வாழ்வதற்குபோதுமான அளவு மாத வருமான ஆதரவு தேவை.

## 4. சம்பள/ஊதிய திருட்டு மற்றும் தவறான வகைப்படுத்தலை நிறுத்த எங்கள் சட்டங்களைசரிசெய்வீர்களா?

முதலாளிகள் நமக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காதபோது சம்பளத் திருட்டு(wage theft)ஏற்படுகிறது. அடிப்படைச் சம்பளத்திற்குக் குறைவாக சம்பளம் பெறும்போது அல்லது விடுப்பு(vacation), பொது விடுமுறை அல்லதுகூடுதல் நேரக் கூலி (over time pay) மறுக்கப்படும்போது இது நிகழ்கிறது.

கனடா ஓய்வூதியத் திட்டம் (CPP), வேலைக்காப்புறுதி (EI) மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுநன்மைகள் (WSIB) ஆகியவற்றில் தங்கள் நியாயமான பங்கைச் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக முதலாளிகள்வேண்டுமென்றே தொழிலாளர்களை சுயதொழில் செய்பவர்களாக தவறாக வகைப்படுத்துகின்றனர்(misclassification ). மேலும், நாங்கள் இவ்வாறு தவறாக வகைப்படுத்தப்படும்போது, அடிப்படைச் சம்பளம், ஓய்வு இடைவேளைகள்மற்றும் வேலை-பாதுகாக்கப்பட்ட விடுமுறைகள் போன்ற தொழில் நியமங்கள் சட்டத்தின்(Employment Standards Act)கீழ் பெறப்படும் எந்தப் பாதுகாப்பையும் நாங்கள் பெறுவதில்லை.

# ஒன்றாரியோ தேர்தல் 2025

## முன்னைய கேள்வியிலிருந்து தொடர்கின்றது

குறிப்பாக எங்களில் பல்வேறு தொழில்களில் போதிய பாதுகாப்பு இன்றி வேலை செய்யும் புலம் பெயர்ந்த  தொழிலாளர்கள் மற்றும் தங்கள் வேலையில் வேறு வகையான பாகுபாடுகளை எதிர்கொள்பவர்களேபாதிக்கப்படுகின்றவர்களாகவும்  இந்த சட்டவிரோத நடைமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க போதுமான சக்திஇல்லாதவர்களாகவும்  உள்ளனர்.

எங்களிடம் உள்ள சட்டங்கள் எவ்வளவு வலுவாக நடைமுறைப்படுத்தப்படுகிறதோ அப்போதுதான் அவை அவ்வளவுவலிமையானவைகளாக இருக்க முடியும். ஆனால் கன்சர்வேடிவ் பிரீமியர் டக் ஃபோர்டின் கீழ், செயல்திறன்மிக்கவேலைத்தள பரீட்சிப்பு மேற்பார்வைகள் (proactive workplace inspections) 2017 இல் 2,932 இலிருந்து 2022 இல்210 ஆகக் குறைந்துள்ளன.

உண்மையில் சட்டத்தை மீறும் முதலாளிகளை தண்டிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு உள்ளது, ஆனால் ஃபோர்ட்இந்த அதிகாரங்களை அரிதாகவே பயன்படுத்தியுள்ளார். 2022 ஆம் ஆண்டில், அரசாங்கம் 6 டிக்கெட்டுகளை மட்டுமேவழங்கியுள்ளது. மற்றும் சம்பளத் திருட்டைச் செய்த முதலாளிகளுக்கு எதிராக 6 வழக்குகளை மட்டுமே தொடங்கியது. அதே ஆண்டில், சம்பளம் திருடப்பட்டதினால் ஒன்றாரியோ தொழில் அமைச்சின் கணிப்பீட்டின்படி $22.7 மில்லியன்தொழிலாளர்களுக்குக் கொடுமதியாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
முதலாளிகள் சம்பளத் திருட்டு செய்து அல்லது தொழிலாளர்களை சுயதொழில் செய்பவர்கள் என தவறாகவகைப்படுத்தி,  சட்டத்தை மீறும்போது எந்த தண்டனையையும் பெறாததால், முதலாளிகள் மீண்டும் மீண்டும் அதேகுற்றங்களை துணிந்து செய்கின்றார்கள். இது நிறுத்தப்படல் வேண்டும்.

சட்டத்தை மீறும் முதலாளிகளால் நாம் தொடர்ந்தும் வறுமையில் தள்ளப்படுவதற்குப் பதிலாக,நமது உழைப்புக்குறியஊதியத்தை நாம் பெற்று, வாழக்கூடியதாக இருக்க வேண்டும்.

## 5. சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, குழந்தை பராமரிப்பு, போக்குவரத்து மற்றும் பிற அத்தியாவசியசேவைகள் போன்ற பொதுச்சேவைகளுக்காக ஒதுக்கப்படும் நிதியை இன்னும்மேம்படுத்துவீர்களா?

வலுவான சமூகத் திட்டங்கள்(strong social programs)இருக்கும் போது அவற்றை உழைக்கும் வர்க்கத்தினர்இலகுவில் பெற்று வாழக்கூடியதாக இருக்கும். நமது சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, சாலைகள் மற்றும் நடைபாதைகள்அல்லது சுத்தமான குடிநீருக்காக இலாப நோக்கம் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு பணம் செலுத்தவேண்டியிருந்தால், நாம் ஏற்கனவே இருக்கும் நிலைமையிலிருந்து மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவோம்.  வரிகள் என்பது அதற்காகத்தான்: நாம் சொந்தமாக உயர் விலையில் வாங்குவதற்குப்பதிலாக,  நமது வளங்களைதிரட்டி, அத்தியாவசிய சேவைகளை நாம் இலகுவில் பெற்றுக் கொள்வதற்காகும்.

பொது சேவைகள் மற்றும் பொது உள்கட்டமைப்பிலிருந்து நிறுவனங்கள்(corporations) பெரிதும் பயனடைகின்றன. நமது பொதுப் பாடசாலைகள் மூலம் கல்வி கற்றவர்கள் மற்றும் பொது சுகாதாரத்தால் ஆதரிக்கப்படும் திறமையானமற்றும் ஆரோக்கியமான

# உங்கள் வேட்பாளர்களைக் கேளுங்கள்

## முன்னைய கேள்வியிலிருந்து தொடர்கின்றது

தொழிலாளர்களால் அவை பயனடைகின்றன. ஒவ்வொரு நாளும், நிறுவனங்கள்(corporations) தங்களது தயாரிப்புகள், வாடிக்கையாளர்கள் மற்றும் தொழிலாளர்களை அவர்கள் இருக்க வேண்டியஇடத்திற்கு கொண்டு செல்ல நன்கு பராமரிக்கப்படும் சாலைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் பொது போக்குவரத்துஅமைப்புகளையும் வசதிகளையும் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் பொதுச் சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பிலிருந்து பயனடைந்தாலும், நிறுவனங்கள் தங்கள் நியாயமானவரிகளை செலுத்துவதில்லை. பல தசாப்த காலமாக இது இடம்பெற்று, வருகின்றது. இந்த பாரிய கூட்டுத்தாபனங்கள்2015ல் $41 பில்லியனை மட்டுமே வரிப்பணமாக செலுத்தியுள்ளன.

ஆனால் 2014ல் மக்கள் செலுத்திய தொகை $145 பில்லியன்கள் ஆகும். 2014 ஆம் ஆண்டில், கனடா ரிவெனியு ஏஜென்சி மதிப்பீட்டின்படி, வரி ஓட்டைகள் மற்றும்வெளிநாட்டு வரி சொர்க்கங்கள்(tax loopholes & offshore tax havens)மூலம் இந்த பாரிய நிறுவனங்கள் $11 பில்லியன் வரை வரிகளைக் கட்டாமல் தவிர்த்துவிட்டதாக அறிவித்தது.

நிறுவனங்கள் வரிகளைக் குறைத்துச் செலுத்தும்போது, பொது சேவைகளுக்குக் கிடைக்கும் பணம் குறைகிறது, எனவே உங்களையும் என்னையும் போன்ற தொழிலாளர்கள் அதிகமாகச் செலுத்தினாலும், எங்கள் சேவைகள்மேம்படவில்லை, சில சமயங்களில் இன்னும் மோசமாகின்றன. இன்று, நமது சுகாதார அமைப்பு அதிக வேலை மற்றும்குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்களால் சிரமப்படுகிறது.

பெரும்பாலும் தாமதமாக வரும் பேருந்துகள் மற்றும்ரயில்களில் மக்கள் கூட்டத்தில் நாங்கள் சிக்கிக் கொள்கிறோம், மேலும் பழுதுபார்ப்பு மிகவும் தேவைப்படுகிறது. குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வித் துறைகளில் தொழிலாளர்கள் நெருக்கடிகள் உள்ளன, ஏனெனில்தொழிலாளர்களால் இவ்வளவு குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய முடியாது.

பல தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் கார்ப்பரேட் வரி குறைப்புகளை நாம் மாற்றியமைத்து, கார்ப்பரேட் வரிமோசடியைக் கட்டுப்படுத்தினால் இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் சரிசெய்யப்படலாம். ஆனால், பாரியநிறுவனங்கள் ஈட்டும் அனைத்து இலலாபத்தைப் பற்றியும் நாம் பேசுவதை அவர்கள் விரும்பவில்லை. அதற்கு பதிலாக, இந்த அரசியல்வாதிகள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அகதிகள், சர்வதேச மாணவர்கள் மற்றும் உயிர்வாழவருமான ஆதரவு தேவைப்படும் அனைவரையும் குற்றம் கூறுவதைப் பார்க்கிறோம்.

இது இப்படி இருக்க வேண்டியதில்லை.பாரிய கூட்டுத்தாபனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் யாவும் தங்கள்நியாயமான வரியை அரசுக்குச் செலுத்தக் கோருவதற்கும், நமது சமூகத் திட்டங்களுக்கு நிதி மற்றும்உள்கட்டமைப்பை மீட்டெடுக்க அந்த பணத்தைப் பயன்படுத்துவதற்கும் ஒன்றுபடுவோம், இதனால் நாம் அனைவரும்நமக்குத் தேவையான சேவைகளை சிறப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலும் அறிய: Justice4Workers.org**

# ஒன்றாரியோ தேர்தல் 2025

## 6. அனைவருக்கும் முதலாளியினால் வழங்கப்படக்கூடிய 10 நாட்கள் சம்பளத்துடனான சுகயீனநாட்களை நீங்கள் சட்டமாக்குவீர்களா?

கனடாவில் 58% தொழிலாளர்களுக்கு சம்பளத்துடனான சுகயீன லீவு இல்லை. $25,000 க்கும் குறைவாகசம்பாதிக்கும் தொழிலாளர்களிஅந்த எண்ணிக்கை 70% ஆக உயர்ந்துள்ளது. குறிப்பாக எங்களில் பல்வேறுதொழில்களில் போதிய பாதுகாப்பு இன்றி வேலை செய்யும் பல இன , மொழி பேசும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், மற்றும் நிலையற்ற வேலைகளில் உள்ள பெண்கள் ( racialized workers, Im/migrants & women in precarious jobs) இந்த சம்பளத்துடனான சுகயீன லீவு நாட்களைக் கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள்குறைவாக இருப்பதால், இந்தப் பிரச்சினை இன, பாலினம் மற்றும் சமத்துவ நீதி(a matter of racial , gender & equity Justice)பற்றிய ஓர் பிரச்சினையாக இப்போது உருவெடுத்துள்ளது. நாம் யாராக இருந்தாலும், நோய்வாய்ப்பட்ட நிலையில் வேலைக்குச் செல்வதா அல்லது எங்கள் பில்களை செலுத்த வேண்டிய நிலையில் எதை செய்வது என்பதை நாம் யாரும் தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்தில்இருக்கக்கூடாது.

நோய்வாய்ப்பட்ட நிலையில் வேலைக்குச் செல்வது நம்மையும், நமது சக ஊழியர்களையும், பொதுமக்களையும்ஆபத்தில் ஆழ்த்துகிறது. COVID தொற்றுநோய் காலத்தில் நமக்கு COVID இருந்தால் வீட்டிலேயே இருக்கவேண்டியிருந்தபோது இந்தக் கடினமான பாடத்தைக் கற்றுக்கொண்டோம். தொற்றுநோய் காலத்தில்தற்காலிகமாக சம்பளத்துடனான சுகயீன நாட்களை அரசு வழங்கியதன் மூலம், நமது அரசாங்கங்கள் 10 நாட்கள்சம்பளத்துடனான சுகயீன லீவுக்கான பிரபலமான கோரிக்கைக்கு பதிலளித்தன. இதனால் நாம், மற்றவர்களைநோய் தொற்றுக்கு உள்ளாக்காமல் வீட்டிலேயே இருக்க முடிந்தது. ஆனால் எமக்கு இப்போது 2025 ஆம் ஆண்டில், ஒன்ராறியோவில் இன்னும் சம்பளத்துடனான சுகயீன லீவு நாட்கள் பூஜ்ஜியமாகவே (zero paid sick days)உள்ளன.

தொழிலாளர்களின் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு 2018 ஆம் ஆண்டில் எங்களுக்கு 2 சம்பளத்துடனானசுகயீன லீவு நாட்கள் கிடைக்கப் பெற்றன. ஆனால் கன்சர்வேடிவ் பிரீமியர் டக் ஃபோர்ட் அந்த ஆண்டுபதவியேற்றபோது, அவர் அந்த 2 சம்பளத்துடனான சுகயீன லீவு நாட்களை ரத்து செய்தார். இதன் விளைவாக, ஒன்றாரியோ தொழிலாளர்களுக்கு இப்போது ஆக 3 சம்பளமற்ற சுகயீன லீவு(unpaid sick days ) நாட்களே உள்ளன. எனவே தொழிலாளர்களுக்கு நோய்வாய்ப்பட்ட நிலையில் வேலைக்குச் செல்வதைத்தவிர வேறு வழியில்லை. முதல்வர் ஃபோர்டுக்கு சரியானதைச் செய்ய எல்லா வாய்ப்புகளும் இருந்தன, ஆனால்அதற்கு பதிலாக, அவரது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 25 முறைக்கு மேல் சம்பளத்துடனான சுகயீன லீவுநாள் மசோதாக்களுக்கு எதிராக(voted against paid sick day bills) வாக்களித்தது.

இதற்கு நேர்மாறாக, மத்திய அரசு எங்கள் பிரச்சாரத்திற்கு பதிலளித்திருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டில், மத்தியஅரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட அனைத்து தொழிலாளர்களும் (போக்குவரத்து, வங்கி மற்றும் தொலைத்தொடர்புபோன்றவை) ஒவ்வொரு ஆண்டும் முதலாளியால் வழங்கப்படும் 10 நாட்கள் சம்பளத்துடனான சுகயீன லீவை(10 employer-paid sick days each year)கொண்டிருக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கியது.

நாம் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது சம்பளத்துடனான சுகயீன லீவை எடுப்பது ஒரு அத்தியாவசிய மனிததொழிலாளர் உரிமையாகும் (an essential human labour right).மேலும் அனைவருக்கும் குறைந்தது 10 நாட்கள் சம்பளத்துடனான சுகயீன லீவை பெற, நாம் தொடர்ந்தும் போராடுகிறோம்.

JUSTICE FOR WORKERS

DECENT WORK FOR ALL

JUSTICE FOR WORKERS
DECENT WORK FOR ALL